

விக்கிரவாண்டி சட்டமன்ற இடை தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டியில் தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா தலைமையில் அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் இஸ்லாமிய பெருமக்களிடம் கழகத்தினர் தீவிர வாக்குச் சேகரித்தனர்.




விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட பொன்னங்குப்பம் ஊராட்சிக்கான 203 & 204 தேர்தல் பணிமனையில் கழக அமைப்புத் துணைச் செயலாளர் அன்பகம் கலை, கழக தேர்தல் பணிக்குழு துணைச் செயலாளர் ஆஸ்டின், சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி ஆகியோர் தேர்தல் பணி குறித்து ஆய்வு மேற்கொண்டனர். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் பலர் உள்ளனர்.

### அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த

# தேவையான சேவைகளை கூட்டுறவு அமைப்புகள் சிறப்பாகச் செயல்படுத்துகின்றன!

## சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



சென்னை, ஜூலை 8 -

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் சர்வதேச கூட்டுறவு தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது - என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் ஒரு ஆலமரம் போல வளர்ந்து ஆழமான வேர்களை எடுத்து மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகள் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் வாழ்வாதாரத்தினை உறுதி செய்திடவும், பயிர்க்கடன், கறவை மாட்டுக்கடன், நகைக்கடன், சுய உதவிக்குழுக்கடன், சிறுவணிக் கடன், மகளிர் தொழிமுனைவோர்க்கடன், மகளிர் சம்பளக்கடன், வீட்டு வசதிக்கடன், போன்ற பல்வேறு வகையிலான கடன்களை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் 34,586 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் 2,10,74,252 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகின்றன. மேலும், 3,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு தேவையான 2,966 விவசாய இயந்திரங்கள் மற்றும் 3,935 கருவிகள் குறைந்த விலையில் வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. 380 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 20% தள்ளுபடி விலையில் தரமான மருந்துகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுவதற்கும், அதன் சாதனைகளை பற்றிய அறிவை மக்களிடையே பரப்பி, விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், 1914 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தினை மேம்படுத்துதல், கூட்டுறவு சங்க அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி அளிப்பது, கூட்டுறவு தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகள் வெளியிட்டும், சிறு கண்காட்சிகள், உறுப்பினர் கல்வி திட்டம் போன்ற பிரச்சார பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை இவ்வொன்றியத்தின் குறிப்பிடத்தக்க பணிகள் ஆகும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களான மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் (38) மூலம் உறுப்பினர் கல்வி திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் மாதம்தோறும் நடத்தப்பட்டு ஊரக மக்களிடையே கூட்டுறவு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. அதே போல் பள்ளி கல்லூரிகளில் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்தி மாணவர்களிடையே கூட்டுறவு இயக்கம் பற்றியும் அதன் தத்துவங்களை விதைத்து வருகின்றது.

சர்வதேச கூட்டுறவு தினத்தை ஆண்டுதோறும் ஜூலை மாதம் முதல் சனிக்கிழமை அன்று 1923ம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சர்வதேசகூட்டுறவு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, "கூட்டுறவுகள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குகின்றன" (*Cooperatives Build a Better Future for All*) என்ற மைய கருத்தில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் சிறப்பு உறுப்பினர் கல்வி திட்ட முகாம்கள், நடத்தப்பட்டு ஊரக பகுதிகளில் உள்ள மக்களுக்கு சர்வதேச கூட்டுறவு தினத்தைப்பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இரத்ததான முகாம், மரக்கன்றுகள் நடும் முகாம்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்படும் 26 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் இச்சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே "இன்றைய கூட்டுறவின் வளர்ச்சியில் மகளிரின் பங்கு" என்ற தலைப்பில் பேச்சு போட்டிகள் மற்றும் "உலக பொருளாதாரத்தில் கூட்டுறவின் ஈடுபாடு" என்ற தலைப்பில் கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டது.

கூட்டுறவு வங்கிகள் / சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பல்வேறு கடன்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி இன்று அனைத்து மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் "உறுப்பினர் சேர்க்கை முகாம்" மற்றும் "கடன் மேளா" நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான சேவைகளை கூட்டுறவு அமைப்புகள் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

# விக்கிரவாண்டி தொகுதியில் மக்கா போன் மூலம் பிரச்சாரம்!

## திப்பம்பட்டி ஆறுச்சாமி - கோழிக்கடை கணேசன் பங்கேற்பு!

விக்கிரவாண்டி, ஜூலை 8 -

விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை கேட்டு தி.மு.க. ஆதி திராவிட குழு மாநில இணைச் செயலாளர், தலைமைக் கழகப் பேச்சாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி நான் மக்கா போன் பிரச்சாரம் செய்தார்.

முன்னாள் நகர செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான கோழிக்கடை கணேசன், பல்லடம் ரோடு மோகன் பூசா ரிப்பட்டி பிரசாந்த் உள்பட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி பேரூர் கழகம் காணை மேற்கு ஒன்றியம் உள்பட பல பகுதிகளில் பிரச்சாரம் செய்தோம் பிரச்சாரம் செய்த இடங்களில் எல்லாம் தலைவர் தளபதியாரின் அரசின் சாதனைகளுக்கு மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு உதயசூரியனுக்கு வாக்களிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த நாளையொட்டி கழக தலைவரும் முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் கலைஇலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர்கள் போட்டோ சுப்பு, கே.பி.ஆர். பூபதி, ஈஸ்வரமூர்த்தி, சரவணன், உதயகுமார் ஏற்பாட்டில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் சோலாரிலுள்ள அட்சயம் அறக்கட்டளை இல்லத்தில் காலை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் துணை மேயர் வி.செல்வராஜ், மாநில நிர்வாகிகள் வழக்கறிஞர் சு.ராதாகிருஷ்ணன், வீரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பொன்னுசாமி, மகாலிங்கம், கோட்டை பகுதி செயலாளர் பொ.ராமசந்திரன். மாவட்ட அமைப்பா ளர்கள் இளைஞர் அணி ஜெ.திருவாசகம், இலக்கிய அணி ப.இளையகோபால் ஆதி திராவிடர் நலக்குழு சென்னியப்பன், மகளிர் அணி கனிமொழி, லீலா இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா. நித்தின், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜாகிர்உசேன், மாமன்ற உறுப்பினர் தண்டபாணி. மணிசிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## விக்கிரவாண்டியில் ஆ.கிருஷ்ணசாமி வாக்கு சேகரிப்பு!

விழுப்புரம், ஜூலை 8-

விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் மேல் கொந்தை ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி வீடுவீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 10-ஆம் தேதி நடைபெறுகிறது. இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி மத்திய ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் மேல் கொந்தை ஊராட்சியில் வீடு, வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து முதலமைச்சரின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

### விக்கிரவாண்டி இடைத் தேர்தல்:

# சோழனூர் - சோழாம்பூண்டி ஊராட்சிகளில் அமைச்சர் இ.பெரியசாமி வாக்கு சேகரிப்பு!

விக்கிரவாண்டி, ஜூலை 8 -

விக்கிரவாண்டி இடைத் தேர்தலை முன்னிட்டு சோழனூர், சோழாம்பூண்டி ஊராட்சி பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் வீதிவீதியாக சென்று பொது மக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். பெண்கள் உரிமைத் தொகை, இலவச பேருந்து பயணம், கல்லூரி மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கிய தமிழக முதல்வருக்கு என்றும் உறுதுணையாக இருப்போம் என அமைச்சர்களிடம் சோழாம்பூண்டி கிராம மக்கள் உறுதி அளித்தனர்.

விக்கிரவாண்டி தொகுதியில் நடைபெறும் இடைத்தேர்தலை முன்னிட்டு தொகுதிக்குட்பட்ட சோழாம்பூண்டி, சோழனூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட அயினாம்பாளையம், பெரியார்நகர், முத்தியால்பேட்டை, தென்னம்மாதேவி, பூத்தமேடு மாரியம்மன் கோவில் தெரு, நடுத்தெரு, காட்டு நாயக்கன் தெரு, ஆதிதிராவிடர் காலனி உட்பட பல கிராமங்களுக்கு நடந்து சென்று பொதுமக்களிடம் தமிழக அரசின் சாதனை திட்டங்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குள் சேகரித்தனர். அப்போதுபொதுமக்கள் மத்தியில் தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசிய போது தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மக்களின் முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்லாட்சியில் ஜாதிமத இன வேறுபாடின்றி அனைத்து நலத்திட்டங்களும் அனைவருக்கும் கிடைத்து வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் வளர்ச்சி அடைந்து வருகிறது. முதல்வரின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் கிராமப்புறங்களை நகரங்களுடன் இணைக்கும் சாலைகள் அமைக்கப்பட்டதால் கிராமப்புற மக்கள் எளிதாக அருகில் உள்ள நகரங்களுக்கு செல்ல முடிகிறது. போக்குவரத்து வசதி கிராமப்புறங்களுக்கு கிடைப்பதோடு கிராமப்புறங்களில் விளைவிக்கப்படும் விவசாயிகளின் விளைபொருட்கள் எளிதாக நகரங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்ய முடிகிறது என்றார். இங்கு என்னுடன் பிரச்சாரத்திற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணியும் வந்துள்ளார். நீங்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது எங்களிடம் கோரிக்கை வைத்த பேருந்து நிறுத்த வசதி, பொதுக்கழிப்பறை வசதி, சாலை வசதிகள் தங்கு தடையின்றி குடிதண்ணீர் வசதிகிடைக்க உட்பட அனைத்தும் தேர்தல் முடிந்தபின்பு படிப்படியாக நிறைவேற்றப்படும் பொது மக்களின் முக்கியமான கோரிக்கையான பகுதிநேர நியாயவிலைக்கடை உடனடியாக அமைத்துக் கொடுக்கப்படும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

இந்த தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா தொகுதி மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர். அவருக்கு வாக்களித்து வெற்றி பெற செய்வதின் மூலம் உங்கள் கிராமங்களுக்கு எண்ணற்ற நலத்திட்டங்கள் எளிதாக வந்தடையும் என்றார். தேர்தல் பிரச்சாரத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்கிரேட் மேரி, பிலால் உசேன், பொருளாளர் சத்திய மூர்த்தி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக பொருளாளர் சாணார்பட்டி விஜயன், கோலியனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் க.மும்மூர்த்தி, சோழாம்பூண்டி ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், தெய்வசிகாமணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே. அஸ்வின் பிரபாகரன், இளைஞரணி அமைப்பாளர் ம.கணேசன், துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன் திண்டுக்கல் மாநகர செயலாளரும், துணை மேயருமான ராஜப்பா, திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றிய திமுக செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் முருகேசன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, நிலக்கோட்டை கரிகால பாண்டியன், வத்தலக்குண்டு கனிக்குமார், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால், துணைத்தலைவர் ஜெயபால், தாடிக்கொம்பு பேரூராட்சி துணைத் தலைவர் நாகப்பன், ஆத்தூர் ஒன்றிய திமுக துணைச் செயலாளர் ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், சோழாம்பூண்டி ஊராட்சி மன்றத்தலைவர் கற்பகவள்ளி, சோழனூர் ஊராட்சி மன்றத்தலைவர் பாஸ்கரன், சோழாம்பூண்டி பகுதி திமுக நிர்வாகிகள் வைத்தியநாதன், சீனிவாசன், எடப்பாளையம் நாராயணராவ், மற்றும் ஆத்தூர் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் செல்வம், அரவிந்தன், ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பாறைப்பட்டி முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ஆத்தூர் காங்கேயன், ரெட்டியார் சத்திரம் கே.புதுக்கோட்டை ரமேஷ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜ கணேஷ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, செல்வி காங்கேயன், வண்ணம்பட்டி காணிக்கைசாமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் தொப்பம்பட்டி கருப்பையா, போடிக்காமன்வாடி நாகலட்சுமி சதீஸ்குமார், சீவல் சரகு ராணிராஜேந்திரன், ஆத்தூர் ஐ.ஜம்ரூத்பேகம், சின்னாளபட்டி பேரூர்கழக பொருளாளர் எஸ்.ஆர்.முருகன், மணலூர் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சுருளிராஜன், பித்தளைப்பட்டி கோபால், அரசு ஒப்பந்தகாரர்கள் பஞ்சம்பட்டி ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், ஆலமரத்துப்பட்டி விக்னேஷ், மாவட்ட பிரதிநிதி ஆரியநல்லூர் தங்கவேல் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், இளைஞரணியினர், மகளிரணியினர், திமுக சார்பு அணியினர் தீவிரமாக தேர்தல் பிரச்சாரம் செய்து வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். பிரச்சாரத்தின்போது துண்டு பிரசுரங்களை வழங்கிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணியிடம் சோழனூர், சோழாம்பூண்டி கிராம மக்கள் தங்கள் வாக்கு உதயசூரியனுக்கே வாக்களிப்போம் என உறுதி அளித்தனர்.



கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் இரண்டரை ஆண்டு சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் திறந்து வைத்து பார்வையிட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், கரூர் மாவட்ட எஸ்.பி. முனைவர் கி.பிரபாகர் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



விக்கிரவாண்டி இடைதேர்தலை முன்னிட்டு திருவாரூர் மாவட்டத்தின் சார்பில், காணை தெற்கு ஒன்றியத்தில் உள்ள மாம்பழப்பட்டு ஊராட்சி 66 மற்றும் 67 பாகங்களில் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளர் ப.பிரகாஷ் மாவட்ட துணைச் செயலாளர் எம்.ராமகிருஷ்ணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என்.ராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.பி.எடிசன் மற்றும் கழக முன்னணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.